பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 03 | செவ்வாய்க்கிழமை | 19.12.2023 | அதிர்வு 140

யாழில் 800 ரூபாவுக்காக

## இ.போ.ச. பஸ் சாரதி அடித்துப் படுகொலை

(எஸ்.நிதர்ஷன்)

கடனாக வாங்கிய 800 ரூபா பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை எனக் கடன் கொடுத்தவர் தாக்கியதில் கடன் வாங்கியவர் உயிரிழந்துள்ளார். 02▶

# போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள மஹிந்தவை நேரில் ஏன் சந்தித்தீர்கள்?

## உலகத் தமிழர் பேரவை, கனேடியத் தமிழ்க் காங்கிரஸ் அமைப்புகள் மீது சீறிப் பாய்கிறார் கரி ஆனந்தசங்கரி



உலகத் தமிழர் பேரவையும், கனேடியத் தமிழ்க் காங்கிரஸும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அண்மையில் நேரில் சந்தித்ததையிட்டு தான் கடும் அதிருப்தி அடைகின்றார் என்று கனடாவின் பழங்குடியின உறவுகள் அமைச்சரான கரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். 02▶



## வெற்றி வாகை சூடிய கில்மிஷாவுக்கு ஜனாதிபதி தொலைபேசியில் வாழ்த்து



கொழும்பு, டிச. 19

தென்னிந்தியாவின் ZEE தமிழ் தொலைக்காட்சி நடத்திய சரிகமப இசை நிகழ்ச்சிப் போட்டியில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுமி கில்மிஷாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

நேற்றுக் காலை அமைச்சரவைக் கூட்டம் முடிவுற்ற பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக ஜனாதிபதி தொலைபேசி மூலம் கில்மிஷாவைத் தொடர்பு கொண்டு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

## இந்திய மீனவர்கள் 14 பேருக்கும் மறியல்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 14 பேரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம், காரைநகர் கடற்பகுதியில் வைத்து இழுவைப் படகுடன் 14 இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் 06▶

## குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தர் ஒருவர் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்., மானிப்பாய் வீதியைச் சேர்ந்த சிவபாதம் சிவசுதன் (வயது 40) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர், தனது வீட்டில் நேற்று தூக்கில் தொங்கிய நிலையில் 06▶

## இரண்டு வெள்ளிப் பதக்கங்களைச் சுவீகரித்து சர்வதேசப் போட்டியில் சாதித்த யாழ். மைந்தன்



மலேசியாவில் நடைபெற்ற ஏசியன் கிளாசிக் பளுதூக்கும் போட்டியில் இலங்கை தேசிய அணி சார்பில் பங்கேற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சற்குணராசா புசாந்தன் இரண்டு வெள்ளிப் பதக்கங்களைச் சுவீகரித்துக்கொண்டார்.

இவர் யாழ்., தென்மராட்சி – சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்தவராவர்.

தேசிய நிலைப் 02▶



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு – நான் அடிக்கடி கிண்டலாகக் குறிப்பிடும் பிள்ளையார் கல்யாணம் என்ற விவகாரம் – நாளை, நாளை என்று தள்ளிப் போய், கடைசியாக அடுத்த மாதத்தில் – 2024 ஜனவரியில் – நடைபெறத்தான் போகின்றது போலும்.

அதைத் தள்ளிப் போடுவதற்கும், அதன் மூலம் பத்தாண்டுகளாகும் தலைமைப் பதவியில் தொடர்ந்தும் நீடிப்பதற்கும், 06▶

# நாடு வங்குரோத்தடைந்தமைக்கு காரணமானவர்கள் மீண்டும் ஆட்சியமைக்க இடமளிக்கப் போவதில்லை

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்



"நாடு வங்குரோத்தடைந்தமைக்கு காரணமானவர்கள் யார் என்பது அண்மையில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலிருந்து தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறானவர்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மக்கள் இடமளிக்க மாட்டார்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

"நாடு வங்குரோத்து நிலைமையை அடைவதற்கு யார் காரணம் என்று நீதிமன்றம் அண்மையில் தெளிவான தீர்ப்பினை வழங்கியது. உலகில் எந்தவொரு நீதிமன்றமும் இவ்வாறானதொரு தீர்ப்பினை வழங்கியுள்ளதாக நான் அறியவில்லை. அவ்வாறானவர்கள் மீண்டும் ஆட்சியமைப்பதற்கு மக்களின் மனசாட்சி இடமளிக்கும் என்று நான் நம்பவில்லை.

நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக அவர்கள் அரசியலிலிருந்து விலகி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்ற செய்தி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை எந்தவொரு ஜனாதிபதியும் செய்யாத விடயமொன்றை நான் செய்தேன். நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கினேன். 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக நான் அதிகாரங்களை தானம் வழங்கினேன்.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பின்னர் சகல நாடுகளுடனும் இராஜதந்திர நட்புறவுகளைப் பேணக் கூடிய இயலுமை என்னிடம் மாத்திரமே காணப்பட்டது.

எனது ஆட்சி காலத்தில் நான் மக்களுக்கு எவ்வித பிரச்சினைகளையும் ஏற்படுத்தவில்லை. போதைப்பொருளுக்கு எதிராகவும், ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்தேன்" – என்றார்.

# சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரிப்பு



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டிற்கு 13 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதனிடையே டிசம்பர் முதலாம் திகதி முதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரையில் ஒரு இலட்சத்து 750 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து 20 ஆயிரத்து 597 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவிலிருந்து 14 ஆயிரத்து 156 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 10 ஆயிரத்து 281 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர். ஜேர்மனி, சீனா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ், கனடா மற்றும் போலந்து ஆகிய நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது.

### போர்க்குற்றச்சாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"பாரிய அளவானதும், கட்டமைக்கப்பட்டதுமான மனித உரிமை மீறல்களுக்காக மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மீது 2023 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி கனேடிய அரசு தடைகளை விதித்தது.

தமிழர்களுக்கு எதிராகப் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றுக்குப் பொறுப்புக்கூறலை வலியுறுத்திப் பல வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும், ஏனைய சர்வதேச அரங்குகளிலும் குரல் எழுப்பப்பட்ட பின்னரே இது நடைபெற்றது.

தப்பிப்பிழைத்தவர்கள், குடிசார் சமூக அமைப்புகள், இலங்கையில் உள்ள தமிழர்கள் ஆகியோரைக் கலந்தாலோசிக்காது மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி முடிவெடுப்பதில் ஏற்பட்ட பாரதூரமான தவறாகும்.

இந்த நடவடிக்கைகள், இந்த அமைப்புகள்மீதும்,புலம்பெயர்தமிழர்களைப்பிரதிநிதித்துவம் செய்வதாகவும், மிக முக்கியமாகத் தாய்நாட்டில் உள்ள தமிழ் மக்களின் நலன்களுக்காகச் செயற்படுவதாகவும் இந்த அமைப்புகள் கூறுவதன் மீதும் இருந்த நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளன.

இலங்கைத் தீவில் உள்ள தமிழர்கள், பொறுப்புக்கூறலுக்குத் தொடர்ச்சியாக அழைப்பு விடுக்கும் பலமானதும், சக்தி வாய்ந்ததுமான குரலைக் கொண்டுள்ளார்கள். அவர்களின் குரலாக இந்த அமைப்புகளின் நிலைப்பாடுகள் அமையவில்லை. இந்த அமைப்புகளின் தலைமைகளை ஆழ்ந்து சிந்திக்குமாறும், அவற்றின் செயல்களுக்குப் பொறுப்புக் கூறுமாறும் நான் கோருகின்றேன்." – என்றுள்ளது.

### இ.போ.ச. பஸ் சாரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்ப்பாணம், ஊரெழு பகுதியைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சாரதியான சிங்காரத்தினம் சிவாஸ்குமார் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த மேற்படி நபர், ஊரெழு பகுதியைச் சேர்ந்த இளைஞரிடம் 800 ரூபா பணத்தைத் திருப்பித் தருவதாகக் கூறி கடனாகப் பெற்றுள்ளார். அந்தப் பணத்தைத் திருப்பி வழங்காததால், கடந்த 10ஆம் திகதி கடன் கொடுத்த இளைஞர், கடன் வாங்கியவருடன் முரண்பட்டு, அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

தாக்குதலின் பின்னர் அவரை அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்று வீட்டாரிடம் ஒப்படைத்து விட்டு அந்த இளைஞர் சென்றுள்ளார்.

மறுநாள் தாக்குதலுக்கு இலக்கான வரின் உடல்நிலை மோசமான நிலையில், வீட்டார் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர்.

சிகிச்சை பெற்று வந்தவர் நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அதையடுத்து சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், தாக்குதலாளியான இளைஞர் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

சரணடைந்த இளைஞரைக் கைது செய்துள்ள பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### இரண்டு வெள்ளிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போட்டிகளில் தனது சாதனையை நிலைநாட்டி வந்த புசாந்தன், தேசிய பளுதூக்கல் அணியில் இடம்பெற்று சர்வதேசப் போட்டிகளிலும் சாதனை படைத்து வருகின்றார்.

அவருக்குப் பலரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.




# நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் சாதகமான மாற்றத்துக்கு நகர்வுகள்

## முன்னெடுப்பு என்கிறார் ஜனாதிபதி ரணில்

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் சாதகமான மாற்றத்திற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தியதலாவை இராணுவக்கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அமைதியை ஏற்படுத்தல், காலநிலை மாற்றம் மற்றும் பல்வேறு உலகளாவிய தாக்கங்கள், இலங்கையின் சர்வதேச உறவுகளின் மூலோபாயத்தின் மையத் தூண்கள் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது, ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தருவது அதிகரித்துள்ள நிலையில், அவர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முயற்சிக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் தூதுக்குழு பணிகளில் இலங்கை இராணுவத்தினர் இணைந்தால், அது இலங்கை இராணுவத்திற்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.











# மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேணுக பெரேரா இராஜினாமா



கடந்த காலங்களில் ஊழியர் போராட்டங்களை தொடர்ச்சியாக எதிர்கொண்ட ரேணுக பெரேரா, மில்கோ நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து நேற்று இராஜினாமா செய்தார்.

தனிப்பட்ட காரணங்களினால் தான் பதவியை இராஜினாமா செய்கிறார் என நிதி அமைச்சின் செயலாளருக்கு அவர் கடிதமொன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளராக செயற்படும் ரேணுக பெரேராவிற்கு கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி மில்கோ நிறுவனத்தின் ஊழியர்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

மில்கோ நிறுவனத்தின் தொழிற்சங்க ஒன்றியமும் இவருக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

எஞ்சிய சம்பளப் பிரச்சினை தொடர்பில் ஆரம்பத்தில் தலைவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன் அதன்பின்னர் அவரின் நிர்வாக பலவீனங்கள் தொடர்பில் வெளிக்கொணரப்பட்டது.

இந்த பின்புலத்திலேயே ரேணுக பெரேரா தனது இராஜினாமாக் கடிதத்தை நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ளார்.

மில்கோ நிறுவனத்திலிருந்து விலகி ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து அரசியல் செயற்பாடுகளில் தாம் ஈடுபடவுள்ளார் என ரேணுக பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, மில்கோ நிறுவனத்தின் புதிய தலைவராக விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜனக தர்மகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



"தாயகஒலி" பிரதம ஆசிரியர்

*தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)*

(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

## சிறுகதைப் போட்டி

இருபிரிவுகளாக நடத்தப்படும்

(பரிசுத் தொகை 1 இலட்சம்)

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

*அனுப்ப வேண்டிய முகவரி :*
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124



# கடும்மழை, வெள்ளத்தினால முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐயாயிரம் பேருக்குப் பாதிப்பு; ஆயிரம் பேர் இடப்பெயர்வு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.19

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் அனைத்துக் குளங்களும் நிறைந்து அதிகளவான நீர் வான் பாய்வதோடு, 341 குடும்பங்களைச் சேர்ந்த 1,039 பேர் இடப்பெயர்ந்து இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தின் பிரதான குளங்கள் அனைத்தும் வான்பாய்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்தின் நீர் கட்டுக்கடங்காமல் பாய்ந்த வண்ணம் உள்ளது. முத்தையன்கட்டு மற்றும் தண்ணிமுறிப்புக் குளத்தின் வான் கதவுகளும் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றிக் கொண்டிருக்கின்றது. குளங்களின் கீழ் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, நேற்று மாலை 4 மணி வரையான தகவல் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன் குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டி குளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்குளம்,விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 286 குடும்பங்களைச் சேர்ந்த 952 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, இந்துபுரம், தட்டையர் மலை, புளியங்குளம், தச்சடம்பன், கூழாமுறிப்பு, கனகரத்தினபுரம், காதலியர்சமனங்குளம், தண்டுவான், ஒட்டுசுட்டான், பழம்பாசி, பேராறு, மணவாளன் பட்டமுறிப்பு, கணேசபுரம், கருவேலன் கண்டல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 354 குடும்பங்களைச் சேர்ந்த 1,076 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை, தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, கொக்கிளாய் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 352 குடும்பங்களைச் சேர்ந்த 1,097 பேரும், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான், மல்லாவி, யோகபுரம் கிழக்கு, புகழேந்தி நகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு, அம்பலப்பெருமாள்குளம், அமைதிபுரம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், துணுக்காய், யோகபுரம் மத்தி, திருநகர் ஆகிய கிராமங்களில் 254 குடும்பங்களைச் சேர்ந்த 782 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு, தேவிபுரம், மாணிக்கபுரம், உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு மற்றும் வள்ளிபுனம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 336 குடும்பங்களைச் சேர்ந்த 887 பேருடன் வெலிஓயாவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேருமாக மாவட்டத்தில் 1,586 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 806 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும், பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவில் 69 குடும்பங்களைச் சேர்ந்த 223 பேரும், கூழாமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் 61 குடும்பங்களைச் சேர்ந்த 178 பேரும், முத்துவிநாயகர்புரம் கிராம அலுவலர் பிரிவில் 45 குடும்பங்களைச் சேர்ந்த 131 பேரும், பேராறு கிராம அலுவலர் பிரிவில் 23குடும்பங்களைச் சேர்ந்த 65 பேரும், கரைதுறைப்பற்றில் கொக்குதொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும், புதுக்குடியிருப்பில் 135 குடும்பங்களைச் சேர்ந்த 408 பேருமாக மொத்தம் 341 குடும்பங்களைச் சேர்ந்த 1,039 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# முல்லையில் 8 பாடசாலைகள் இன்று இயங்கா என அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.19

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 8 பாடசாலைகள் இயங்க மாட்டாது என மாவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார்.

தற்போது நிலவி வருகின்ற அதிகரித்த மழையுடன் கூடிய கால நிலை காரணமாக இன்றைய தினம் சில பாடசாலைகள் இயங்க மாட்டா எனவும், அதற்கமைய புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் –

+ மண்ணகண்டல் அ.த.க.பாடசாலை
+ இருட்டுமடு தமிழ் வித்தியாலயம்
+ நெத்தலியாறு ஆரம்பப் பாடசாலை

ஆகியவை இயங்கா என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் –

+ கருவேலன்கண்டல் அ.த.க.பாடசாலை
+ கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலை
+ முத்துவிநாயகபுரம் மகாவித்தியாலயம்
+ பேராறு அ.த.க.பாடசாலை
+ கற்சிலைமடு பண்டாரவன்னியன் ம.வி.

ஆகியவை இயங்காது அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் இதனை அறிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா நேற்றுக் கடைசி நேரம் வரை எடுத்த தீவிர முயற்சி சரிவராமல் போயிற்று.

நேற்று திருகோணமலையில் கட்சியின் அரசியல் குழுவும், மாநாட்டை நடத்தும் ஏற்பாட்டுக் குழுவான கட்சியின் திருகோணமலை மாவட்ட குழுவும் ஒன்றிணைந்து நடத்திய கூட்டத்தில் இந்தத் தேசிய மாநாட்டைத் தள்ளிப் போடச் செய்ய கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா எடுத்த தீவிர முயற்சிகள் முகத்தில் அடித்தால் போல கூட்டத்தில் பங்குபற்றியோரால் முறியடிக்கப்பட்டது.

இதில் அவருக்கு உள்ள சோகம் என்னவென்றால், கூட்டத்தில் பங்கு பற்றிய யாருமே மாநாட்டை ஒத்திவைக்கும் அவரது பேச்சைக் கேட்கவே இல்லை. எல்லோரும் ஒன்றுபட்டு, திட்டமிட்ட திகதியில் மாநாட்டை நடத்தியே முடிக்க வேண்டும் என்று ஒரே பிடியாக – விடாப்பிடியாக – நின்றமையினால் வேறு வழியின்றி அதற்குத் தலைவரும் இணங்க வேண்டியவரானார். அவருக்கு சார்பாக நிற்பார் – அவரின் ஆள் – என்று கருதப்பட்ட கட்சியின் பொருளாளர் கனகசபாபதி கூட மாநாட்டை ஒத்திவைக்கும் அவரது வலியுறுத்தலுக்குத் தலை சாய்க்கவில்லை.

நேற்றுக் கூட்டம் ஆரம்பமானதுமே மாநாட்டை ஒத்திவைப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்ற புராணத்தைத் தொடங்கினார் மாவையர். திருகோணமலை மாவட்டக் கிளை தெரிவுகள் தொடர்பில் சம்பந்தன் ஆட்சேபனை தெரிவித்திருக்கின்றார், அந்தத் தெரிவுகளைத் திருத்தி, மாற்றி அமைத்த பின்னர்தான் மாநாட்டை நடத்தலாம் என்று தனது வழ்மையான பல்லவியைத் தொடங்கினார் மாவையர். கூட்டத்தில் பங்கு பற்றிய எல்லோருமே அதற்கு மாறி, மாறிப் பதிலடி கொடுத்தனர். குறிப்பாக திருகோணமலை மாவட்டப் பிரதிநிதிகள் கடுமையாக நின்றனர்.

இதில் இன்னொரு பின்புல இரகசியமும் உண்டு. அடுத்த தலைவர் பதவிக்கு நேரடிப் போட்டியில் இறங்கியிருக்கும் சுமந்திரனும் ஸ்ரீதரனும் மாநாட்டை ஒத்திவைக்கும் எத்தனத்திற்கு எக்காரணம் கொண்டும் இடம் அளிப்பதில்லை என்று தங்களுக்குள் முன்கூட்டியே பேசித் தீர்மானித்துக் கொண்டுதான் கூட்டத்துக்கே வந்திருந்தனர்.

கட்சியின் தேசிய மாநாடு இம்முறையும் நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்படுமானால் இலங்கைத் தமிழரசுக் கட்சி குறித்து தமிழ்ச் சமூகமே சிரிக்கும் என்பதுதான் ஸ்ரீதரனின் நிலைப்பாடு. அப்படி ஏளனத்திற்கும் பரிகாசத்துக்கும் உள்ளாகும் கட்சியின் தலைமைப் பொறுப்பை, அதற்குப் பின்னர் தாம் ஏற்று எப்படிக் கட்சியை மேம்பாடடையச் செய்ய முடியும் என்ற கவலை அவருக்கு.

மாநாட்டை ஒத்திவைப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்று மாவை பேசத் தொடங்கியதும் சுமந்திரன் வழிமறித்தார். மாநாடு இம்முறை ஒத்திவைக்கப்பட்டால் இனிக் கட்சி எதிர் நோக்கக்கூடிய முக்கிய பிரச்சினைகளை சுமந்திரன் சட்டரீதியான பின்புலப் பார்வையில் தெளிவுபடுத்தினார். கட்சிக்கு ஏற்படக்கூடிய கதிக்கு – பாரிய பின்னடைவுக்கு – நீங்களே (மாவை சேனாதிராசாவே) பொறுப்பை – வரலாற்றுப் பழியை – ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று சுமந்திரன் சுட்டியதும் தீயை மிதித்தவர் போல துள்ளிக் குதித்து இடையில் குறுக்கிட்டுப் பதிலளித்தார் மாவையர்.

“நான் இல்லை, சாம் அண்ணன் (சம்பந்தன் அண்ணன்) தான் அப்படி சொன்னார்” – என்று கட்சியினர் முன்தோன்றிக் கருத்துக் கூற முடியாத சம்பந்தனை சாட்சிக்கு இழுத்தார் மாவை.

சுமந்திரன் விடவில்லை. “அப்படியானால் கட்சிக்கு நேரக்கூடிய நிலைமைக்கு சம்பந்தன்தான் பொறுப்பேற்க வேண்டி நேரும். அது வரலாற்றுப் பழியாகவும் இருக்கும்” என்ற சாரப்பட குளிசை கொடுத்தார் சுமந்திரன்.

தீவுப் பகுதி, கிளிநொச்சி உட்பட வடக்குக்கு மேலும் அதிக பொதுக்குழு உறுப்பினர்கள் இடமளித்தல், திருகோணமலை மாவட்டத்திற்கு மேலும் சில இடங்களை வழங்குதல், கொழும்பு கிளையின் சார்பில் மேலும் இரு பொதுக் குழு இடங்களை அளித்தல் என்பன போன்ற சில விட்டுக் கொடுப்புகள் செய்வதன் மூலம் ஏனைய குழப்பங்களுக்கு தீர்வு காண நேற்றைய கூட்டத்தில் இணக்கமாகத் தீர்மானிக்கப் பட்டது.

நேற்றைய கூட்ட முடிவுகளின் படி ஜனவரி 21ஆம் திகதி தலைவர் மற்றும் ஏனைய உத்தியோகஸ்தர்கள் தேர்வு நடக்கும். கட்சியின் உத்தியோகபூர்வ மாநாடு 28ஆம் திகதி இடம்பெறும்.

கட்சித் தலைவர் தெரிவில் தற்சமயம் மூன்று பேர் உள்ளனர். சுமந்திரன், ஸ்ரீதரன் மற்றும் யோகேஸ்வரன். போட்டியிலிருந்து யாரும் விலகுவதற்கான கடைசி தினம் நாளை ஆகும். எனினும் மூவரில் எவரும் விலகிக் கொள்வதற்கான சாத்தியங்கள் தென்படவில்லை என்பது தான் கள நிலைமை.

## குடும்பஸ்தர் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சடலமாகக் காணப்பட்டுள்ளார். இதைக் கண்ட உறவினர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாலை கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து நேற்று நீரியல் வளத் திணைக்களத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். அதன்பின்னர் அவர்கள் நேற்று மாலை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் பதில் நீதிவான் சரோஜினி தேவி இளங்கோவனின் இல்லத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அவரின் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், கைதான இந்திய மீனவர்கள் அனைவரையும் எதிர்வரும் 28 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

இதில் இரு மீனவர்கள், கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர். இந்த இரு மீனவர்களையும் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் வைத்தியசாலைக்கு நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஏனைய 12 மீனவர்களும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பல்டி அரசியலைச் சகிக்கும் கட்டாயம்

கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட, இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை எதிரணியில் இருந்து கொண்டு, அணி மாறி ஆதரித்து வாக்களித்தமையால் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பின்னர் இழக்க வேண்டியவரானார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான நஸீர் அஹமட்.

அணி மாறி வாக்களித்தமையை ஒட்டி அவரது கட்சி அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றியது. அதனை - கட்சியின் அந்த ஒழுங்கு நடவடிக்கையை - உயர்நீதிமன்றம் ஏற்று, அங்கீகரித்தமையால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார் நஸீர் அஹமட்.

அவரது விடயத்தில் அவருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கைகளை அவரது கட்சி முறையாக - உரிய வழிமுறைப்படி - ஒழுங்காக - முன்னெடுத்தமையால் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்கும் சுருக்குக்குள் அவர் தப்ப முடியாமல் சிக்கிக் கொண்டார்.

ஆனால், இம்முறை வரவு - செலவுத் திட்டத்தின் போது பல எம்.பிக்கள் அப்படி அணி மாறித் தாராளமாக வாக்களித்துள்ளனர். தத்தமது கட்சி நிலைப்பாடுகளுக்கு எதிராக அவர்கள் அனைவரும் செயல்பட்டுள்ளனர்.

ஆனால் நஸீர் அஹமட்டுக்கு எதிராகப் பாய்ந்த ஒழுங்கு நடவடிக்கை இவர்களுக்கு எதிராக பாயப் போவதில்லை. அதற்கான வாய்ப்புகள் ரொம்பக் குறைவு.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் நாடாளுமன்றுக்குத் தெரிவான இருபத்தியைந்துக்கும் அதிகமான எம்.பிக்கள் கட்சித் தலைமையின் - கட்சிக்கொரடாவின் - வழிகாட்டலுக்கு மாறாக, வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்துள்ளனர்.

அதே சமயம் சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களிப்பது என்ற கட்சியின் முடிவுக்கு மாறாக, அந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்த்தனர். சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ள, சந்திமவீரக்கொடி, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார உட்பட மேலும் ஏழு பேரும் பகிஷ்கரித்துள்ளனர்.

ஆனால் இவர்கள் எல்லோரும் இப்படிக் கட்சியின் முடிவுக்கு மாறிச் செயல்பட்டமைக்காக இவர்களுக்கு எதிராகஒழுங்குவிதிகள்பாயப்போவதில்லை. ஏனெனில் இவர்களுக்கு எதிராக சட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் ஒழுங்குக் கட்டமைப்பில் அவர்களின் மொட்டுக்காட்சி இல்லை என்பதுதான் அதற்கு காரணம்.

ராஜபக்ஷக்களின் கடந்த இரண்டு தசாப்த கால அரசியலை நோக்குபவர்களுக்கு - கணிப்பிடுபவர்களுக்கு - ஒரு விடயம் துலாம்பரமாகத் தெரியும்.

அது, நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் மாற்று அணியின் எம்.பிக்களை குதிரைப் பேரம் மூலம் தமக்கு ஆதாரவானவர்களாக மாற்றியே பல அரசியல் இலக்குகளை அவர்கள் எட்டினர் என்பதுதான்.

அத்தகைய குதிரைப் பேரத்தை தமது அரசியல் பரவணிப் பழக்கமாகக் கொண்ட அவர்கள், அவ்வாறான முறைமைக்கு எதிராக நீதிமன்றத்திடம் போக மாட்டார்கள், போக முடியாது.

அதனால்தான் அவர்கள் தரப்பில் இரண்டு டசினுக்கு மேற்பட்ட எம்.பிக்கள் இப்படி மாறி, மாறிக் குத்துக்கரணம் அடித்து அரசியல் செய்வதை அவர்கள் - அவர்களது கட்சி - பார்த்துக் கொண்டு வாளாவிருக்க வேண்டி இருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் பல்டி அரசியலை ஊக்குவித்தவர்கள், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து நீதிமன்றுக்குப் போக முடியாது என்பதால், பல்டி அரசியலைப் பார்த்து, சகித்துப் போக வேண்டிய கட்டாயமே அவர்களுக்கான ஒரே பாதையாக - வழியாக - மார்க்கமாக - உள்ளது.

# ஒரே நேரத்தில் 4 இலக்குகளை தாக்கும் ஆகாஷ் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை

## - இந்தியா புதிய சாதனை



4 இலக்குகளை ஒரே நேரத்தில் தாக்கி அழிக்கும் திறன் வாய்ந்த ஏவுகணை அமைப்பை கொண்டிருக்கும் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றிருக்கிறது.

வானில் 25 கி.மீ. தூரம் வரையிலான இலக்குகளை அழிப்பதற்காக இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ) ஆகாஷ் ஏவுகணை அமைப்பை வடிவமைத்து தயாரித்து உள்ளது.

இந்த ஏவுகணை அமைப்பு ஒரே நேரத்தில் 4 இலக்குகளை தாக்கி அழிக்கும் திறன் வாய்ந்தது. இது டி.ஆர்.டி.ஓ.வால் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டும் வருகிறது. இந்த ஏவுகணை அமைப்பு நேற்று முன்தினம் விமானப்படை அதிகாரிகளால் சோதித்து பார்க்கப்பட்டது.

அப்போது வானில் இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டு இருந்த 4 ஆளில்லா விமானங்களை இந்த ஏவுகணை ஒரே நேரத்தில் வெற்றிகரமாக தாக்கி அழித்தது. இது ஒரே ஏவுதல் அலகில் இருந்து செலுத்தப்பட்டது என்பது சிறப்பாகும்.

இதன் மூலம் ஒரே ஏவுதல் அலகில் இருந்து 4 இலக்குகளை ஒரே நேரத்தில் தாக்கி அழிக்கும் திறன் வாய்ந்த ஏவுகணை அமைப்பை கொண்டிருக்கும் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றிருக்கிறது. இது தொடர்பாக டி.ஆர்.டி.ஓ. தனது எக்ஸ் தளத்தில், 'ஆகாஷ் ஏவுகணை அமைப்பு இந்திய விமானப்படையால் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. ஒற்றை ஏவுதல் அலகு மூலம் ஒரே நேரத்தில் 25 கி.மீ. தூரத்தில் 4 வான் இலக்கு களை தாக்கி அழிக்கும் திறனை வெளிப்படுத்திய முதல் நாடு இந்தியா' என குறிப்பிட்டுள்ளது.

---


# ஜம்மு காஷ்மீரில் நிலநடுக்கம்: பொதுமக்கள் வீதிகளில் தஞ்சம்

ஜம்மு காஷ்மீரில் உள்ள லடாக் நகரில் 5.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் நேற்று பிற்பகல் 3.48 மணியளவில் பதிவாகியுள்ளது.

மேலும் இந்த நிலநடுக்கம் லடாக்கில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளதோடு நிலநடுக்கத்தால் கட்டடங்களும் அதிர்ந்துள்ளன.

இதனால் அதிர்ச்சி அடைந்த




பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து வீதிகளில் தஞ்சம் அடைந்தனர் என ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

எனினும் இந்த நிலநடுக்கத்தால் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படவில்லை என இந்திய அரசு தெரிவித்துள்ளது.

அதேவேளை கிஷ்த்வார் பகுதிகளில் பிற்பகல் 4.01 மணியளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் 4.8 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளதோடு 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

# தலித்துக்கள் காலணிகள் அணியக்கூடாது: திருப்பூர் மாவட்டம் சாதிய ஒடுக்குமுறை

திருப்பூர் மாவட்டம் உடுமலையில் உள்ள ராஜாவூர் மற்றும் மைவாடி கிராமங்களில் தலித் மக்கள், காலணிகள் அணியக்கூடாது என்ற சாதிய ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுவது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

திருப்பூர் மாவட்டம் மடத்துவாக்கத்தில் உள்ள இந்த இரண்டு கிராமங்களில் தலித் மக்களை தாழ்வாக நடத்தும் குற்றம் தொடர்ந்து நடைபெறுவதாக கூறப்படுகிறது.

தேநீர் கடைகளில் தலித் மக்க ளுக்கு மட்டும் பேப்பர் கப்புகளைப் பயன் படுத்துவது, ராஜாவூர் மற்றும் மைவாடி கிராமங்களுக்கு காலணிகள் அணிய தலித் மக்களுக்கு தடை விதிப்பது போன்ற தீண்டாமைக் குற்றங்கள் தொடர்ந்து நடந்துவருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தமிழ் புலிகள் கட்சியினர் அளித்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த ஒடுக்குமுறைகள் பல ஆண்டுகளாக இங்கு இடம்பெறுவதாகவும், மீறுபவர்கள் மீது வன்முறைத் தாக்குதல்கள் நடைபெறும் எனவும் மக்கள் தெரிவிகின்றனர் என தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாவட்டச் செயலாளர் எம்.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

# இரண்டு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதித்தது வடகொரியா!



வடகொரியா சில மணிநேர இடை வெளியில் இரண்டு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை பரிசோதித்துள்ளது.

தென்கொரியா மற்றும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளுக்கிடையிலான சந்திப்பு இடம்பெற்று சில நாட்களுக்கு பின்னர் வடகொரியா ஏவுகணை பரிசோதனைகளை நடத்தியுள்ளது.

இந்த ஏவுகணை 73 நிமிடங்கள் பயணித்து, ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை கடந்து, ஹொக்கைடோவின் மேற்கு கடலில் தரையிறங்கியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இந்த ஆண்டு மாத்திரம் வடகொரியா ஐந்து ஏவுகணை பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஒரு வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட அதிகளவான ஏவுகணை பரிசோதனையாக இது கருதப்படுகிறது.

# தெற்கு காசா பகுதியில் இடம்பெற்ற மோதலில் இஸ்ரேல் இராணுவ வீரர்கள் 5 பேர் உயிரிழப்பு

தெற்கு காசா பகுதியில் ஞாயிற்றுக் கிழமை இரவு நடந்த மோதலில் தமது ஐந்து வீரர்கள் கொல்லப்பட்டனர் என இஸ்ரேலிய இராணுவம் திங்களன்று ஒப்புக்கொண்டதாக அல்-ஜசீரா தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய உத்தியோகபூர்வ அறிவிப்பின்படி, காஸாவில் தரைப்படை நடவடிக்கை தொடங்கியதில் இருந்து கொல்லப்பட்ட வீரர்களின் எண்ணிக்கை 133 ஆக உயர்ந்துள்ளது.

இஸ்ரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இஸ்ரேலிய இராணுவ செய்தித் தொடர்பாளர் ஒருவரை மேற்கோள் காட்டி, தெற்கு காசா பகுதியில் நடந்த சண்டைகளின் போது நான்கு வீரர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும் விபரங்களை வழங்காமல், அந்த சண்டைகளில் ஐந்தாவது சிப்பாய் காயமடைந்தார் என்று குறிப்பிட்டது.



ஒக்டோபர் 7 முதல் இஸ்ரேலிய இராணுவத்தின் மொத்த இழப்புகளின் எண்ணிக்கை, சமீபத்திய அதிகாரபூர்வ எண்ணிக்கையின்படி, 459 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த சில நாட்களாக தெற்கு காசா பகுதியில், குறிப்பாக கான் யூனிஸில் மோதல் போக்கு தீவிரமடைந்துள்ளதால் இஸ்ரேலிய இராணுவத்தின் இழப்புகள் அதிகரித்துள்ளன.


பாலஸ்தீனிய எதிர்ப்புக் குழுக்கள் இஸ்ரேலிய டாங்கிகள், இராணுவ வாகனங்கள் மற்றும் படையினரின் கூட்டங்களை குறிவைத்து தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

இதன் விளைவாக இஸ்ரேலிய படைத்தரப்பில் ஏராளமான இறப்புகள் மற்றும் காயங்கள் ஏற்பட்டன.

# மெக்சிகோவில் விருந்துபசார நிகழ்வில் துப்பாக்கிச் சூடு: 12 பேர் உயிரிழப்பு

மெக்சிகோவில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வொன்றின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு மெக்சிகோவின் சல்வடோர் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துபசார நிகழ்வொன்றிலேயே இந்த துப்பாக்கிச்



சூடு இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் குறித்த சம்பவத்தில் 12 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 06 பேர் கொண்டு குழுவினரால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சல்வடோர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வவுனியா அல் - அக்ஸா மகாவித்தியாலய மாணவர்கள், பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

## றிசாத் எம்.பியை சத்தியத்திற்கு அழைக்கும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்

(கி.வசந்தரூபன்)

வவுனியா, சாளம்பைக்குளம் அல் - அக்ஸா மகாவித்தியாலய மாணவர்கள் மற்றும் பெற்றோர் இணைந்து பாடசாலைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

ஜனாதிபதியின் நிதி ஒதுக்கீட்டில் நான்கு வருடங்களிற்கு முன் அடிக்கல் நாட்டப்பட்ட பாடசாலை கட்டடத்திற்குரிய நிதி திரும்பி அனுப்பி வைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் –

நான்கு வருடங்களுக்கு முன்பாக முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனால் இந்தப் பாடசாலைக்கான கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. எனினும் நாட்டின் நிலை காரணமாக கட்டடப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு அந்த நிதி திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் மீண்டும் அந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் அந்த நிதி ஒதுக்கீட்டை இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இடைநிறுத்தி இருக்கின்றார் என்ற செய்தியை அறிந்து கொண்டோம். எனவே, இடைநிறுத்தப்பட்ட நிதியை விடுவித்து குறித்த கட்டட வேலையை மீண்டும் தொடர அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தியே நாம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றோம். – எனத் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது அதில் ஈடுபட்டிருந்தோர் “கல்வியில் அரசியலைக் கலக்காதே!”, “அரச நிதியைத் தடை செய்யாதே!”, “கல்விக்குத் தடையாக இருக்காதே!” போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இது தொடர்பில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான கே.கே.மஸ்தான் அவர்களிடம் கேட்டபோது –

“எனது பிரதேசத்துக்கு வரும் எந்த அபிவிருத்தி திட்டத்தையும் நிறுத்தும் செயற்பாட்டை நான் மேற்கொள்ள மாட்டேன். இது சில அரசியல் காரணங்களுக்காக ஒரு அரசியல்வாதி இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டு இருக்கின்றார். எம்மைப் பொறுத்த வரையில் எமது மதத்தின் பிரகாரம் அழிவு சத்தியம் என்கின்ற ஒரு விடயம் இருக்கின்றது. இதற்கு றிசாத் வரத் தயாராக இருக்கிறாரா என நான் கேட்க விரும்புகின்றேன். குறிப்பாக இந்த வேலை திட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டிருந்தமை எனக்கு தெரியும். ஆகவே இந்த திட்டத்தினை மேற்கொள்ள வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடு இருக்கின்றது. அதேவேளை தமிழ், சிங்கள பாடசாலைகளிலும் இவ்வாறான ஒரு நிலைமை இருக்கின்றது. அதனையும் செயல்படுத்த வேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்திருந்தேன்.

ஜனாதிபதியை சந்திப்பதற்காக சென்றிருந்த போது அங்கு செயலாளர்தான் இருந்தார். அவரிடம் இந்தப் பாடசாலைகளுக்கான இந்த திட்டத்தின் போது ஏனைய தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளையும் உள்வாங்குமாறு ஒரு கோரிக்கையை வைத்திருந்தேன். ஆனால் இந்த திட்டத்தினை நிறுத்துமாறு கோரி வியாழேந்திரனையோ அல்லது முஷரப் எம்.பியையோ நான் அழைத்துச் செல்லவும் இல்லை அவ்வாறான ஒரு சந்திப்பு இடம் பெறவும் இல்லை. இது முற்றிலும் பொய்யான ஒரு தகவல். ஆகவே இந்த அழிவு சத்தியத்தை செய்வதற்கு அவரை நான் அழைத்து நிற்கிறேன்” – என அவர் தெரிவித்தார்.














# மட்டக்களப்பில் 1,433 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன!

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழு பிரதேச செயலக பிரிவுகளில் 1,433 குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாக பிரிவுகளான கோரளைப்பற்று தெற்கு கிரானில் உள்ள ஐந்து கிராமங்களில் 941 குடும்பங்களும், போரதீவுப்பற்று வெல்லவெளியில் உள்ள நான்கு கிராமங்களில் 92 குடும்பங்களும், கோரளைப்பற்று வடக்கு வாகரையில் உள்ள இரண்டு கிராமங்களில் 319 குடும்பங்களும், எறாவூர்ப்பற்று செங்கலடியில் உள்ள எழு கிராமங்களில் 32 குடும்பங்களும், மண்முனை தென்மேற்கு பட்டிப்பளையிலுள்ள நான்கு கிராமங்களில் 47 குடும்பங்களும், மண்முனைப்பற்று ஆரையம்பதி மற்றும் கத்தான்குடியில் தலா ஒரு குடும்பமும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

# மட்டு குளங்களிலும் நீர் மட்டம் அதிகரிப்பு பலவற்றில் நீர் வான்பாய விடப்பட்டுள்ளது

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அலுவலகம் அறிவித்துள்ளது.

உன்னிச்சைக் குளத்தில் 31.3 அடி, உறுகாமம் குளத்தில் 15.11அடி நீர்மட்டம் அதிகரித்து வான்கதவு திறக்கப்பட்டு அவற்றிலிருந்து மேலதிக நீர் வெளியேறுகின்றது.

வாகனேரி குளத்தில் 17.1அடி , கட்டுமுறிவு குளத்தின் 11.9 அடியும், வெலிக்காக்கண்டிய குளத்தில் 16 அடி 5 அங்குலம் என நீர் மட்டம் அதிகரித்து 12அங்குலத்தில் மேலதிக நீர் வெளியேறுகிறது.

மேலும் வடமுனைக்குளத்தின் நீர் மட்டம் 12.10அடி, கித்துள்வெவ குளத்தில் 7அடியும் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

புணானை அணைக்கட்டு 5.5அடி, வடமுனை 12.10அடி வெளிகஹா கண்டிய 15.5 அடி, தும்பங்கேணிக்குளத்தின் நீர்மட்டம் 16.6 அடி, நவகிரிக் குளத்தின் 30.7 அக்குளத்தில் 2 வான்கதவுகள் 2.5 உயரத்தில் திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த 48 மணித்தியாலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னிச்சைப் பகுதியில் 6.0 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், உறுகாமம் பகுதியில் 3.0 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், வாகனேரிப் பகுதியில் 13.7 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், கட்டுமுறிவுப் பகுதியில் 9.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், நவகிரிப் பகுதியில் 33 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், தும்பங்கேணிப் பகுதியில் 46 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழ்வான பிரதேசங்களில் தேங்கியுள்ள மழைநீர் வழிந்தோட முடியாமையினால் பாதைகளில் நீர் தேங்கியுள்ளதுடன் வீடுகளுக்குள்ளும் வெள்ளநீர் உட்புகுந்துள்ளது.

அதனால் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளமையுடன் அவர்களின் அன்றாட நிலைமைகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 50 நீர்த்தேக்கங்கள் வான்பாய்கின்றன நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவிப்பு

பலத்த மழையுடன் கூடிய வானிலையால் 50 இற்கும் மேற்பட்ட பிரதான நீர்த்தேக்கங்கள் வான்பாய்கின்றன என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 80 வீதம் வரை உயர்வடைந்துள்ளதாக திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் சுதர்ஷனி விதானபத்திரன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மல்வத்து ஓயாவை பயன்படுத்தும் போது மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் நீர்ப்பாசன திணைக்களம் மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

மல்வத்து ஓயாவின் தாழ்நிலப் பகுதி மக்களுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

நில்வலா கங்கையின் தாழ்நிலப் பகுதிகளிலும் தொடர்ந்தும் வெள்ள அபாயம் உள்ளதாகவும் நீர்ப்பாசன திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை, காலி, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் பல பிரதேச செயலக பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# திருமலை ஜமாலியா, லவ்லேன் பெரும் வெள்ளத்தில் மூழ்கின!



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலையில் பெய்து வரும் அடை மழை காரணமாக நகரப் பகுதியில் அமைந்துள்ள துளசிபுரம் கிராம சேவகர் பிரிவின், ஜமாலியா, லவ்லேன் 75 வீட்டுத் திட்டம் மற்றும் பள்ளத்தோட்டம், கேணியடி ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள் ளன.



# ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் காத்தான்குடிக் கடற்கரைப் பிரதேசதில் கைது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி விஷேட அதிரடிப் படை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 690 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் என்.எல்.நிசாந்த தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ எதிரிமானவின் வழி காட்டலில் காத்தான்குடி கடற்கரை பிரதேசத்தில் வைத்து இளைஞரொருவர் கைது செய்யப்பட்டமையுடன், அவர் வசமிருந்த ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# மருதமுனையின் ஊடக முதுசம் சாய்ந்தது



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனையை சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் பி. எம்.எம்.ஏ.காதர் நேற்றுத் தனது 66 ஆவது வயதில் காலமானார்கள்.

1957 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி பிறந்த ஊடகவியலாளர் பி.எம்.எம்.ஏ.காதர், எதிர்வரும் 27ஆம் திகதி தனது 67 வது வயதை நிறைவு செய்ய இருந்த தருணத்தில் இவ்வுலகை விட்டு விடைபெற்றுச் சென்றார்.

35 ஆண்டுகள் ஊடகத்துறையில் பரிணாமித்துக் கொண்டிருந்த பி.எம். எம்.ஏ.கதார், இலங்கையின் தேசிய பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, விடிவெள்ளி, தமிழன், தினக்குரல், மெட்ரோ நியூஸ், நவமணி போன்ற பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகை மற்றும் மாதாந்த சஞ்சிகைகளிலும் தனது எழுத்துப் பணியைத் தொடர்ந்தார்.

தான் வாழ்ந்த மருதமுனை பிரதேசத்தினதும் ஏனைய பிரதேசங்களினதும் வாழ்வியல் அம்சங்களை இலத்திரனியல், சமூக ஊடகங்கள் என்று பல வகை ஊடாக உலகறியச் செய்த ஒரு மூத்த ஊடகவியலாளராவார். ஊடகத்துறையில் பல்வேறு விருதுகளை பெற்றுக் கொண்ட இவர் சிறந்த ஊடகவியலாளருக்கான தேசிய விருதுகளையும் வென்றுள்ளார்.

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதி கொழும்பு தாமரை தடாக மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற கலாபூசண விருது வழங்கும் விழாவில் ஊடகத்துறைக்கான கலாபூசணம் விருதினைப் பெற்றுக் கொண்டார். 2010 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்திய போட்டியில் ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளுக்காக சிறந்த பத்திரிகையாளருக்கான சுப்பிரமணிய செட்டியார் தேசிய விருதை வென்ற முதல் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர் என்ற பெருமையும் இவரையே சாரும். 2012 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்



சங்கமும் இணைந்து நடாத்திய போட்டியில் மெட்ரோ நியூஸ் பத்திரிகையில் “விலேஜ் விசிட்” என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைகளுக்காக சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான தேசிய விருதையும் இவர் வென்றார். 2018 ஆம் ஆண்டின் ஊடகத்துறைக்கான கிழக்கு மாகாண வித்தகர் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு இலங்கை சமாதான கற்கைகள் நிலையத்தினால் 2015 ஆம் ஆண்டுக்கான சமாதான தூதுவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஊடக துறையின் மூலம் இன நல்லுறவுக்கும் சமாதானத்துக்கும் இவர் ஆற்றிய பெரும் பங்களிப்புக்காக இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மருதமுனை பிரதேசத்தின் பல்வேறு சிவில் சமூக அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள் ஊடாகவும் பல விருதுகள் வழங்கி இவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். மருதமுனை புதுப்புனைவு இலக்கிய வட்டம் 2019 ஆம் ஆண்டு இவருக்கு விழா ஒன்று நடத்தியதோடு தீராமை எனும் சஞ்சிகையும் வெளியீட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவை சேர்ந்த மர்ஹூம் பத்து முஹம்மது ராவுத்தர் பீர்முகம்மது மற்றும் மருதமுனையைச் சேர்ந்த இஸ்மாலெப்பை ஆமினா உம்மா தம்பதியின் இரண்டாவது புதல்வரான இவர் மருதமுனை – 01 அக்பர் வீதியில் தனது மகளின் இல்லத்தில் வாழ்ந்து வந்த நிலையில் காலமானார்கள்.

எம்.எல்.ஹவ்லத் அவர்களின் கணவரும்,ஹரீஸா, சாகிறா. றாயிஷா, சீமா,சீபா,சஜீத் அஹமட் ஆகியோரின் தந்தையுமாவார்.

இவரது ஜனாஸா நல்லடக்கம் மருதமுனை அக்பர் ஜும்ஆ பள்ளிவாசலில் தொழுகை நடாத்தப்பட்டு அக்பர் மையவாடியில் நேற்று இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது. இதில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

பல இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கிவிப்பாளராக வாழ்ந்து மறைந்த சமூக செயற்பாட்டாளரான ஊடகவியலாளர் பி.எம்.எம்.ஏ.காதர் அவர்களின் மறைவு மருதனை மண்ணிற்குப் பேரிழப்பாகும். அன்னாரின் மறுமை வாழ்வு சிறக்கவும் ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்வான சுவர்க்கம் கிடைக்கவும் பிராத்திப்போம்.





# இளம் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.எம்.எம்.ஏ.காதர்

## அனுதாபச் செய்தியில் முஸ்லிம் மீடியா போரம் தலைவர் அமீன் தெரிவிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மருதமுனை-01 அக்பர் வீதியைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் அண்மைக்காலமாக சுகயீனமுற்றிருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை தனது 66 ஆவது வயதில் காலமானார்.

அவரது மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் சார்பில் அதன் தலைவர் என்.எம்.அமீன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் –

பல இளம் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாகவும் ஊக்குவிப்பாளராகவும் இருந்துள்ள பி.எம்.எம்.ஏ. காதருடைய இழப்பு ஊடகத்துறையில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சிரேஷ்ட உறுப்பினரான மர்ஹூம் பி.எம்.எம்.ஏ. காதருக்கு அவரது ஊடக ஆளுமையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக முஸ்லிம் மீடியா போரம் அதன் வருடாந்த மாநாடு ஒன்றில் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கிக் கௌரவித்தது.



இவர் 35 வருடகாலமாக தனது ஊடகப்பயணத்தை நிறைவு செய்த நிலையில், இறையடி சேர்ந்துள்ளார். இவர், தினகரன், வீரகேசரி, விடிவெள்ளி, தமிழன், தினக்குரல், மெட்ரோ நியூஸ், நவமணி போன்ற பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகை மித்திரனியிலும் மற்றும் மாதாந்த சஞ்சிகைகளிலும் தனது எழுத்துப்பணியைத் தொடர்ந்தார்.

அன்னார் எம்.எம்.ஹவ்லதின் அன்புக் கணவரும், ஹரீஸா, சாயிறா. றாயிஷா, சீமா, சீபா, சஜீத் அஹமட் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் அவருடைய மறைவையிட்டு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கும் அதேவேளை, அவருடைய மறுமை வாழ்வுக்காக அனைவரையும் பிரார்த்திக்குமாறும் கேட்டுக் கொள்கின்றது.



# அஸ்கிரிய – மல்வத்து மகாநாயக்க தேரர்கள் மிஹிந்தலை குறித்து ஜனாதிபதிக்கு கடிதம்

வரலாற்றுச் சிறப்புமிக்க மிஹிந்தலை புனித பூமிக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

பௌத்த தத்துவத்தை முழு உலகிற்கும் வழங்கிய தேரவாத பௌத்த பாரம்பரியத்தின் கேந்திர நிலையமாக திகழும் மிஹிந்தலை புனித பூமியை, அரசாங்கம் பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியமானது என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், வரலாற்று சிறப்புமிக்க மிஹிந்தலை புனித பூமியை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என தாம் நம்புகிறார்கள் எனவும் அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.



# தம்பலகாமமும் வெள்ளத்தில்!



(ஹஸ்பர்)

கனமழை காரணமாக திருகோண மலை மாவட்டத்தில் தம்பலகாமம் பிர தேச செயலக பகுதியில் பல தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள மையுடன் வயல் நிலங்களும் பாதிக் கப்பட்டுள்ளன்ச்.

தொடர் அடை மழை காரணமாக முள்ளிப்பொத்தானை அல்ஹிஜ்ரா முத லாம் குறுக்குத் தெரு வீதி நீரில் மூழ்கி யுள்ளதுடன் ,வ் வீதி ஊடாக பயணம் செய்ய முடியாது என மக்கள் தெரிவிக் கின்றனர். பாடசாலை மாணவர்கள் உட் பட பலர் ,வ் வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

வெள்ள நீரை வெளியேற்ற ஏதாவது முறையான திட்டமொன்றை மேற்கொள்ளு மாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர்.

# மன்னார் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் 632 குடும்பங்களைச் சேர்ந்த 2,245 பேர் பாதிப்பு

(மன்னார் நிருபர்)




மன்னார் மாவட்டத்தின் மூன்று பிரதான ஆறுகளின் நீர் மட்டம் உயர்ந்து செல்வதால் தாழ் நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே. திலீபன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 632 குடும்பங்களைச் சேர்ந்த 2245 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் 404 குடும்பங்களைச் சேர்ந்த 1495 நபர்களும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 04 நபர்களும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 175 குடும்பங்களைச் சேர்ந்த 427 நபர்களும், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 52 குடும்பங்களைச் சேர்ந்த 119 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் தற்போது 4 தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேவன் பிட்டி கிராமத்தில் 3 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு 131 குடும்பங்களைச் சேர்ந்த 438 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரிய பண்டிவிரிச்சான் கிராம சேவையாளர் பிரிவில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 83 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவுகள் மற்றும் ஏனைய நிவாரண உதவிகள் பிரதேச செயலகம் கிராம அலுவலகர் ஊடாக வழங்கி வைக்கப்படுகின்றன.

இம் மக்களுக்கு அப்பகுதிகளில் உள்ள இராணுவம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங் களினாலும் உடனடித் தேவைகள் மற்றும் மேலதிக உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தின் மூன்று பிரதான ஆறுகளின் நீர் மட்டம் உயர்ந்து செல்வதால் தாழ் நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

தற்போது அருவி ஆற்றின் நீர் மட்டம் உயர்வாக காணப்படுகின்றமையினால் எதிர்வரும் நாள்களில் மழை பெய்யும் காரணத்தினாலும் ஆற்று வெள்ளம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

எனவே தாழ் நிலப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் மிகவும் அவதானத்துடனும், விழிப்புடன் இருக்க வேண்டும். அவ்வாறான அனர்த்த நிலை ஏற்படுமாக இருந்தால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தோடும், பிரதேச செயலாளர்கள் ஊடாகவும் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

நீர்ப்பாசனத் திணைக்களம் தொடர்ச்சியாக நீர் மட்டங்களின் அளவுகள் தொடர்பான பதிவுகளை உடனுக்குடன் வழங்கி வருகிறார்கள். தற்போது மல்வத்து ஓயாவின் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகிறது.

இதனால் குஞ்சுக்குளம் ஊடாக பாயும் நீர் மட்டம் அதிகரித்து குஞ்சுக்குளம் செல்லும் பாதை பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த பாதையூடாக பயணம் செய்யும் மக்கள் அவதானத்துடன் செல்ல வேண்டும். இராணுவம் மற்றும் பாதுகாப்பு துறையினரின் ஆலோசனைக்கு அமைவாக பிரயாணங்கள் பாதுகாப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் அனைத்து விடயங்களையும் அகற்றுங்கள்

## பதில் பொலிஸ் மா அதிபர் கடும் உத்தரவு



எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்குள் சகல பாடசாலைகளில் இருந்து 500 மீற்றர் வளாகத்திற்குள் அமைந்துள்ள, மாணவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் அனைத்து இடங்களையும் அகற்றுமாறு பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தெமட்டகொட பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் போதைப் பொருள் சுற்றிவளைப்பின்போது, கைதான சந்தேகநபர்களில் 2,020 ஆண்களும், 101 பெண்களும் அடங்குகின்றனர்.

அவர்களில் 12 சந்தேகநபர்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப் படவுள்ளனர்.

அத்துடன், 133 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளமையுடன், 5 சந்தேகநபர்கள் தொடர்பில் சொத்துகள், பொறுப்புக்கள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# மஹபொல புலமைப்பரிசிலினால் கல்வித் துறையில் பெரும் புரட்சி

## பிரதமர் தினேஷ் குணவர்தன கருத்து

மஹபொல புலமைப்பரிசில் மூலம் கல்வியில் பாரிய புரட்சி ஏற்பட்டுள்ளது எனப் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜா – எல நகர சபை விளையாட்டரங்கில் இடம்பெற்ற மஹபொல கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியின் நிறைவு விழாவில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மஹபொல மூலம் தீர்வு கிடைத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மஹபொல புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மாணவர்களின் கல்வி தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டுள்ளதால் புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன எனவும் பிரதமர் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# வரித் திருத்தங்களைச் செய்யாமல் நாட்டைக் கட்டியெழுப்ப இயலாது

## கலாநிதி ஹர்ஷ டி சில்வா எம்.பி. கூறுகிறார்

”வரி திருத்தங்கள் இன்றியோ, பொருளாதார மறுசீரமைப்புக்கள் இன்றியோ நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. அரசாங்கம் எதிர்பார்த்துள்ள வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் நாணய நிதியத்துடனான வேலைத்திட்டங்கள் முற்றாக வீழ்ச்சியடைந்து விடும்.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

”அரசாங்கம் எதிர்பார்த்துள்ள வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால், சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டு வேலைத்திட்டங்கள் வீழ்ச்சியடையும்.

அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் எமக்கு கை கொடுப்பதற்கு யார் இருக்கின்றனர்? 2023ஐ போன்றே, 2024 ஆம் ஆண்டும் நெருக்கடி மிக்கதாகவே



இருக்கும்.

பொருளாதார மறுசீரமைப்புக்கள் இன்றி நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற கற்பனை கதையைக் கூறுவதற்கு நான் தயாராக இல்லை.

சீன எக்ஸிம் வங்கி, பரிஸ் கிளப் நாடுகள் மற்றும் இந்தியா என்பவற்றுடன் கடன் மறுசீரமைப்பைப் மேற்கொள்வதற்கான ஆரம்ப இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதன் மூலம், நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டின் முதற்படியைக் கடந்துள்ளோம்.

எனினும் அதற்கான ஒப்பந்தம் இதுவரை கையெழுத்திடப்படவில்லை. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் மாத்திரமே, வர்த்தகக் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள முடியும்.

பொய்கூறி மக்களை ஏமாற்ற நினைப்பவர்கள் இது குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும். கடந்த ஆண்டு பெறுமதிசேர் வரியின் மூலம் பெற்றுக்கொண்ட வருமானத்தை விட, இரு மடங்கு அதிக வருமானத்தை இவ்வாண்டு பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

பூச்சியமாகக் காணப்பட்ட சில பொருள்களுக்கான வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது நியாயமற்றதாகும். இதனால் குறைந்த வருமானம் பெறும் மக்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

செல்வந்தர்களுக்கான சொத்து வரியை அதிகரித்தால், சாதாரண மக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கலாம். எனினும் இதனையும் சிலர் எதிர்க்கின்றனர்.

அனைத்து வரிகளுக்கும் எதிர்ப்பினை வெளியிட்டால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. தற்போது நாட்டுக்கு கிடைக்கும் வரி வருமானம் போதுமானதல்ல.” – என்றார்.



# கிளிநொச்சி மாவட்டத்தில் 5,204 பேருக்குப் பாதிப்பு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.19

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிய சீரற்ற வானிலையால் 1,661 குடும்பங்களை சேர்ந்த 5,204 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 21 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.199 குடும்பங்களைச் சேர்ந்த 604 பேர் இடைத் தங்கல் முகாம்களான பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில், கண்டாவளை பிரதேசத்தில் 321 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 96 குடும்பங்கள் பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளன.

அவர்களுக்கான சமைத்த உணவுகள், அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உப தபாலகம் உள்ளிட்ட பொது மக்கள் சேவை நிலையங்களும் வெள்ளத்தில் சிக்கியுள்ளன.

கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இவ்வாறு அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலாள் பிரிவில், 445 குடும்பங்களை சேர்ந்த 1,452 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 05 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 1,216 குடும்பங்களைச் சேர்ந்த 3,752 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 16 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என மாவட்டச் செயலகத்தின் புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளம் வடிந்து வரும் நிலையில், தொடர்ந்தும் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. இதேவேளை, பாதிக்கப்பட்டவர்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர் என மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. இதேநேரம் மாவட்டத்தில் தொடர்ந்தும் மழை அதிகரித்த வண்ணமே இருப்பதனால் பாதிப்புக்களும் அதிகரித்த வண்ணமே உள்ளது.





# இன்றைய ராசி பலன்கள் - 19.12.2023


மேஷம்

உங்களின் நிஜ ஆற்றலை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். உங்கள் இலக்குளை நிர்ணயித்து அதனை அடைய செயலாற்றுங்கள்.

நீங்கள் கடினமாக பணியாற்றி உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்பீர்கள். உங்கள் சமயோசித புத்திக்கு பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சி காண்பீர்கள்.

உங்களின் தேவையின் போது உங்களுக்கு பணம் கிடைக்கும். பங்கு வர்த்தகம் உங்களுக்கு லாபம் அளிக் கும்.

இன்று உங்களிடம் ஆற்றலும் உற்சாகமும் நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


ரிஷபம்

இன்று உங்கள் பொறுப்புகளை நிறை வேற்றுவீர்கள். என்றாலும் விரும்பும் பலன்களை அடைய நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

உங்கள் பணிக்கு நற்பெயர் எடுப்பீர்கள். பணி சம்பந்தமான பயணம் காணப்படு கின்றது.

நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொள்வீர்கள். அவரின் இதயத்தில் இடம் பிடிப் பீர்கள்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் முயற்சியின் மூலம் அதிக பண வரவைப் பெறுவீர் கள்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். சரியான நேரத்தில் உணவு மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.


மிதுனம்

ஆன்மீக நிகழ்சிகள் மற்றும் சொற்பொழிவுகளில் பங்கு கொள்வது ஆறுதல் தரும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியில் பதட்டமான நிலைமை காணப்படும். சூழ் நிலையை அனுசரித்து நடந்தால் வெற்றி கிடைக்கும். என்றாலும் இது சற்று கடினமாக காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். எனவே அமைதியான போக்கை மேற்கொள்வது நல்லது. எனவே அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அஜாக்கிரதை மற்றும் கவனக் குறைவு காரணமாக இன்று பணம் இழப்பீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

சளி சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும்.


கடகம்

இன்று ஆன்மீகத்தில் ஈடுபடுவது உங்களுக்கு வழிகாட்டியாக அமையும். இத்தகைய நிகழ்வுகள் மூலம் உங்கள் நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ள இயலும்.

பணியிடத்தில் புதிய வாய்ப்புகள் காணப்படும். அதிக பணிகளை மேற்கொள்வதில் மகிழ்ச்சி கொள்வீர்கள். உங்கள் அர்ப்பணிப் பான பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள்.

இன்றைய நாளை நீங்கள் இனிமையாக ஆக்கு வீர்கள். உங்கள் உறவில் புத்துணர்ச்சி காணப்படும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். நிதி நிலைமை இன்று உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் தேக ஆரோக்கியத்தை சிறந்த முறையில் பராமரிப்பீர் கள்.


சிம்மம்

இன்று அமைதியான கட்டுப் பாடான அணுகுமுறை தேவை. தெய் வீகப் பாடல்கள் கேட்பது மற்றும் கேளிக்கை நிகழ்சிகளில் பங்கு கொள்வது மகிழ்ச்சி அளிக்கும்.

உங்கள் பணியில் நீங்கள் அதிக பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படு வீர்கள். உறவில் அமைதியை நிலைநாட்ட நீங்கள் இதனை தவிர்க்க வேண்டும்.

இன்று பண வரவிற்கு உகந்த நாள் அல்ல. பண இழப்பு ஏற்படாமல் இருக்க ட்ஸ்ரீநீங்கள் திட்டமிட வேண்டும்.

இன்று முழுவதும் உங்கள் ஆரோக்கியம் குன்றி காணப்படும். கால் வலி ஏற்பட வாய்புள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.


கன்னி

இன்று உங்களுக்கு உற்சாக மான நாள். நீங்கள் வளர்ச்சி நோக்கி முன்னேறுவீர்கள். திட்டமிட்டு தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் வெற்றி காணலாம்.

உங்கள் பணியில் பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக் கும்.

உங்கள் துணையுடன் அன்பாகப் பழகுவதன் மூலம் நல்லிணக்கம் ஏறபடும். இதனால் இருவரும் பரஸ்பரம் மகிழ்ச்சி கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் தரத்தை உயர்த்துவதற்கு சேமிப்பு நிலையை சிறப்பாக பராமரிப்பீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.


துலாம்

உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். அதனை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்க ளுக்கு இன்று திருப்தி கிடைக்கும்.

நீங்கள் சிரத்தையுடன் உங்கள் பணி களை முடிப்பதற்கு முயற்சி செய்வீர்கள். உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அலுவலகப் பயணம் ஒன்றைப் பற்றி ஆலோசிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் இருவரும் சிறப்பான நேரத்தை பகிர்ந்து கொள்ளலாம்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அதனை குடும்ப நலத்திற்காக செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது உதவி கரமாக இருக்கும்..


விருச்சிகம்

இன்று சிறிது பதட்டம் காணப்படும். அதிக சௌகரியங்களை அனுபவிக்க இயலாது. நீங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். அமைதியின்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

நீங்கள் உங்கள் பணிகளை முடிக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். பணியில் உங்களுக்கு கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவிய சிறிது கவன மாக பணியாற்றவும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கபப்படும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் மதிப்பு மிக்க பொருட்களை பத்திர மாக வைத்துக் கொள்வது நல்லது.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.12.2023




இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். சௌகரியமாக இருக்க இத்தகைய சூழ்நிலையை தவிர்க்க வேண்டும். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை நீங்கள் கவனமாக மேற்கொள்ள வேண்டும். அதிகமாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் ஏமாற்ற உணர்வு காணப்படும். இது உறவின் நல்லிணக்க ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பணம் திருட்டு போக வாய்ப்புள்ளது.

இன்று சளி சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். குளிர் பானங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். உங்கள் முயற்சிகள் யாவும் வெற்றியை பெற்றுத் தரும். இன்று நீங்கள் அதிக பலன்களை காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைவாகவும் எளிதாகவும் முடிப்பீர்கள். உங்களில் இருக்கும் திறமையின் மூலம் இது சாத்தியம். இது உங்களுக்கு நன்மை அளிக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான நேரத்தை பகிர்ந்து மகிழ்வீர்கள். குடும்பத்தின் பல விஷயங்களை உங்கள் துணையுடன் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும். இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். எனவே உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




தினசரி செயல்களை மேற்கொள்ளும்போது யதார்த்தமான அணுகுமுறை தேவை. பெரிய அளவில் செயல்கள் நடக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்தால் ஏமாற்றம் தான் கிடைக்கும்.

அதிக பணிகள் காரணமாக உங்கள் பணிகளில் தடைகள் காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு நடந்து கொள்வீர்கள். இதனால் உறவு பாதிக்கும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். ஆரோக்கியத்திற்காக பணம் கூடுதலாக செலவு ஆகும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் பதட்டத்தை சமாளிக்கலாம்.




உங்கள் வழக்கமான பணிகளை கவனமாக முறையாக கையாள வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். ஆன்மீக நிகழ்சிகளில் ஈடுபடுவது நல்ல பலன் அளிக்கும்.

அதிகப் பணிகள் காரணமாக உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

குடும்ப பிரச்சினை ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் விவாதிப்பீர்கள். இந்தப் பிரச்சினைகளை தீர்க்க இருவரும் பரஸ்பரம் கலந்து பேச வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக பணம் கூடுதலாக செலவு ஆகும். வீட்டு முன்னேற்றம் குறித்த செலவுகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் கண்கள் மற்றும் பற்களில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனம் தேவை.







### சர்வதேச மாஸ்டர் மெய்வல்லுநர் போட்டிகளில்

# பதக்கங்களைச் சுவீகரித்த புத்தளம் சகோதரர்கள்



மாத்தறையில் நடைபெற்ற சர்வதேச மாஸ்டர் மெய்வல்லுநர் திறந்த போட்டிகளில் புத்தளத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் இரண்டு தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்தனர்.

இப்போட்டிகள் கடந்த 16ஆம் திகதி மாத்தறை - கொடவில்ல விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

உடற்கல்வி ஆசிரியர்களான எம். எப்.எம் ஹுமாயூன் உயரம் பாய்தல் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், எம்.எப்.எம் துபையில் நீளம் பாய்தல் போட்டியில் தங்கப்பதக்கத்தையும் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்தனர்.

இவர்கள் இருவரும் கற்பிட்டி கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அல்-அக்ஷா தேசிய பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். அதேவேளை, புத்தளம் பாத்திமா பெண்கள் கல்லூரிக்கும் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த வருடம் செப்டெம்பர் மாதம் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற 35ஆவது சர்வதேச மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றிய இந்தச் சகோதரர்கள் இருவரும் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை பெற்றனர்.

உயரம் பாய்தலில் எம்.எப்.எம். ஹுமாயூன் தங்கப் பதக்கமும், 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் எம்.எப்.எம். துபைல் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றிருந்தனர்.

தேசிய மட்டம் மற்றும் சர்வதேச மட்டத்தில் விருதுகளைப் பெற்ற இவர்களின் முயற்சியில் புத்தளத்தில் முதல் தடவையாக மெய்வல்லுநர்களுக்கான பயிற்சிக்கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### 12 வயதுக்குட்பட்ட பாடசாலை மட்ட உதைபந்தாட்டத்தில்

# யாழ். மாவட்ட சம்பியனானது தெல்லிப்பளை மகாஜன

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் யாழ்ப்பாண மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட 12 வயதுக்குட்பட்ட பெண்கள் அணிகளுக்கிடையே உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், சாவகச்சேரி இந்துக் கல்லூரியை எதிர்கொண்ட மகாஜனாக் கல்லூரி 3:0 கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது.